

மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர் இ.பரந்தாமனை, ஆதரித்து அச்சரப்பாக்கம் மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட பொற்பரங்கரணை ஊராட்சியில் பொறுப்பாளர் இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர்.காந்தி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். இதில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம். மாநில சுற்றுசூழல் அணி துணை செயலாளர் ஆர். வினோத்காந்தி, ஒன்றிய செயலாளர் கோகுல கண்ணன், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர, பேரூர் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட மகளிரணி, தொண்டர்அணி அமைப்பாளர், கழகத்தினர் உடனிருந்தனர்.



புதுச்சேரி தட்டாஞ்சாவடி தொகுதி தி.மு.க. வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளர் க. பொன்முடி, மாநில அமைப்பாளர் இரா. சிவா, விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் மருத்துவர் பொன். கௌதமசிகாமணி, தட்டாஞ்சாவடி தொகுதி பொறுப்பாளர் டாக்டர் நித்திஷ் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், கூட்டணி கட்சி தலைவர்கள் நேற்று முன்தினம் மாலை தட்டாஞ்சாவடி தொகுதிக்கு உட்பட்ட பொய்யாக்குளம், வினோபா நகர் பகுதியில் வசிக்கும் மக்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர்.

மக்களுக்கான அரசு வெளிப்படைத் தன்மைக்கு அஞ்சக் கூடாது!

மாற்றத்திற்கு உறுதியளித்த முதலமைச்சர் விஜய் இதை உணராதது ஏன்?

'தி இந்து' நாளேடு கேள்வி!

சென்னை, செப். 30 -

மக்களுக்காகப் பணியாற்ற விரும்பும் எந்தவொரு அரசாங்கமும் வெளிப்படைத்தன்மைக்கு அஞ்சக்கூடாது. இதை, மாற்றத்திற்கு உறுதியளித்த முதலமைச்சர் ஜோசப் விஜய் உணராதது ஏன் என்று 'தி இந்து' நாளேடு கேள்வி எழுப்பியுள்ளது.

'தி இந்து' நாளேட்டில் இது குறித்து வெளியான தலையங்கம் வருமாறு:

அரசியல் கட்சிகள் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆர்வலர்களின் போராட்டங்கள், தமிழ்நாட்டில் பொது (சட்டம் மற்றும் ஒழுங்கு) துறைக்கு 2005 ஆம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வரம்பிலிருந்து விலக்கு அளிக்கும் ஒரு பிற்போக் குத்தனமான முடிவை இரகசியமாகச் செயல்படுத்துவதைத் தடுத்துள்ளன.

செப்டம்பர் 21 அன்று, மாநில அரசு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரிவு 24 (4)இன் கீழ் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, அத்துறையை ஒரு "உளவு மற்றும் பாதுகாப்பு அமைப்பாக" அறிவித்து, சட்டத்தின் விதிகள் அதற்குப் பொருந்தாது என்று ஒரு அரசாணையை (GO) வெளியிட்டது.

அந்த அரசாணை செப்டம்பர் 27 அன்றுதான் பொதுவெளியில் வெளிவந்த நிலையில், வியக்கத்தக்க வகையில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொதுத்துறைக்கு நியமிக்கப்பட்ட அதிகாரிகள், செப்டம்பர் 22 அன்றே விண்ணப்ப தாரர்களுக்குத் தகவல்களை மறுக்க உடனடியாக அதைக் குறிப்பிடத் தொடங்கினர்.

இது வெளிப்படைத்தன்மையில் முதலீடு செய்யத் தயங்கும் ஒரு அமைப்பைக் காட்டிக்கொடுத்தது. எதிர்பார்த்தபடியே, மாநில சட்ட அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார், அரசின் ஒருதலைப்பட்சமான முடிவு குறித்து ஆரம்பத்தில் தற்காப்பு நிலை எடுத்தார்.

எப்படியாயினும், இந்த முடிவை மாநில அரசு சட்டமன்றத்தின் முன் வைக்க வேண்டியிருந்தது (தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 24 (5)). இந்த விலக்கின் வரம்பு முழுத் துறையையும் பாதுகாக்கும் அளவுக்கு விரிவானதாக இல்லை என்றும், மாறாக, மதக் கலவரங்கள் மற்றும் அதுபோன்ற சம்பவங்கள் குறித்த மாவட்ட அளவிலான விசாரணைகள் தொடர்பான முக்கியமான தகவல்கள் பகிரப்படுவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டது என்றும் அவர் கூறினார்.

இருப்பினும், சிறிது நேரத்திலேயே, அதற்கான காரணத்தை விளக்காமல், அந்த அரசாணை திரும்பப் பெறப்படுவதாக அவர் அறிவித்தார்.

மாநில அரசின் நிர்வாக விவகாரங்களில் இரகசியத்தைக் காக்கும் அரசியல் தரப்பின் போக்கை இந்த நிகழ்வு மீண்டும் அம்பலப்படுத்தியுள்ளது.

மாற்றத்தைக் கொண்டுவருவதாக வாக்குறுதியளித்த முதலமைச்சர் சி.ஜோசப் விஜய், இதை நன்கு உணர்ந்திருக்க வேண்டும். பிரிவு 8இன் கீழ் உள்ள நீண்ட விலக்குகளின் பட்டியலின் மூலம் தகவல்களை வெளியிடாமல் இருப்பதை திட்டவட்டமாக அனுமதிக்கும் ஒரு சட்டத்தைத் திருத்துவதன் மூலம், வெளிப்படைத்தன்மையிலிருந்து தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ள ஆளும் தரப்பு விரும்பியது கவலையளிக்கிறது.

அதுமட்டுமின்றி, ஒன்றிய /மாநில நிறுவனங்களின் நியமிக்கப்பட்ட தகவல் அலுவலர்கள், உண்மையை மறைப்பதிலும், தெளிவற்ற காரணங்களைக் கூறி தகவல் அறியும் உரிமைச் சட்ட விண்ணப்பதாரர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதில் தாமதம் செய்வதிலும் அல்லது கேள்விகளைத் திருப்பி அனுப்புவ தலும் ஒரு விசித்திரமான திறமையைக் காட்டியுள்ளனர்.

மேலும், டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டம், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை மேலும் நீர்த்துப்போகச் செய்யும் என்ற கவலைகள் பரவலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஜூன் மாத நிலவரப்படி, தமிழ் நாடு மாநில தகவல் ஆணையத்தில் (TNSIC) 41,000க்கும் மேற்பட்ட மேல்முறையீடுகளும் புகார்களும் தேங்கிக் கிடப்பதாக, சதர்க் நாகரிக் சங்கத்தின் 2024-25 ஆம் ஆண்டுக்கான தகவல் ஆணையங்கள் குறித்த அறிக்கை கண்டறிந்துள்ளது கவலையளிக்கிறது

இருப்பினும், TNSIC தனக்கு அனுமதிக்கப்பட்ட எட்டு தகவல் ஆணையர்களில் பாதி பேருடன் மட்டுமே செயல்பட்டு வருகிறது. மேலும் அதற்கு தலைமை தகவல் ஆணையர் யாரும் இல்லை. குடிமக்களுக்குத் தகவல் பெறும் உரிமையை வழங்குவதற்காக இயற்றப்பட்ட ஒரு சட்டத்தின் நோக்கத்தைத் தோற்கடிக்க முயல்வதற்குப் பதிலாக, தமிழ்நாடு அரசு TNSICஐ வலுப்படுத்துவது நன்மை பயக்கும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, வெளிப்படைத்தன்மைக்கு அஞ்சாத ஒரு நிர்வாகத்தால் மட்டுமே மாற்றத்தின் உண்மையான முன்னோடியாக இருக்க முடியும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

நேபாளத்தில் நிலச்சரிவு வீடியோ வெளியீடு!

காத்மாண்டு, செப்.30- நேபாளத்தில் வெள்ள பாதிப்புகள் தொடர்ந்து வரும் நிலையில், இயற்கை அங்கு எந்தளவுக்கு கொடூரமாக இருக்கிறது என்பதை காட்டும் வீடியோக்கள் சமூக வலைதளங்களில் பரவி வருகிறது. வெறும் ஆறே நொடிகளில் ஒட்டு மொத்த மலையும் சரிந்து விழும் காட்சிகள் சமூக வலைதளங்களில் பரபரப்பை கிளப்பி யுள்ளது.

நேபாளத்தில் அடுத்தடுத்து ஏற்பட்ட வெள்ளம், நிலச்சரிவு மற்றும் பனிச்சரிவு சம்பவங்கள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இதில் இரண்டு வெவ்வேறு இடங்களில் எடுக்கப்பட்ட வீடியோக்கள் தற்போது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. அதில் சுமார் 6 விநாடிகளில் மலைப்பகுதிகள் அப்படியே சரிந்து விழும் காட்சிகள் பதிவாகியுள்ளன. மலை சரிவதை பார்த்த மக்கள் அச்சத்தில் கதறி அழுவது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

முதல் வீடியோ முதல் வீடியோ மஸ்டாங் மாவட்டத்தின் லேட் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை வெள்ளம் ஏற்பட்ட போது எடுக்கப்பட்டது. திடீர் வெள்ளத்தால் நிலச்சரிவு ஏற்பட்ட போது மலையின் பெரிய பகுதி ஒன்று கீழே உள்ள காளிகண்டகி ஆற்றுக்குள் சரிந்து விழுவது தெரிகிறது. சுமார் 6 விநாடிகளில் மண் மற்றும் பாறைகள் வேகமாக ஆற்றில் சரிந்து விழுகின்றன. இதை பார்த்த அப்பகுதி மக்கள் அச்சத்தில் அலறும் சத்தமும் பதிவாகியுள்ளது. சார் தம் புனித யாத்திரை சென்றவர்கள் இந்த வீடியோவை எடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மலைப்பகுதி சரிந்து விழுந்ததால் காளிகண்டகி ஆற்றின் பாதையே சற்று நேரம் முடங்கியது.. பின்னர் நீர், குவிந்திருந்த இடிபாடுகளுக்கு நடுவே புதிய பாதையை உருவாக்கி மீண்டும் ஓட தொடங்கியது. இவை அனைத்துமே அந்த வீடியோவில் மிக தெளிவாக பதிவாகியுள்ளது.

ராமப்பொருத்தம்...



தன்னை
எம்.பி.
எம்.எல்.ஏ. என வெற்றி பெற
வைத்து

பல வாய்ப்புகளை தந்த
கட்சி

ஆட்சிக்கு வரவில்லை
என்றதும்

மக்கள் தந்த
எம்.எல்.ஏ. பதவியை ஒரு
மாதத்துக்குள்
ராஜினாமா
செய்துவிட்டு

ஆட்சியை பிடித்த
புதுக் கட்சியிடம் அடகு
போயிருப்பவர்

இப்ப அந்த
ஆளுங்கட்சியின் சார்பில்
மீண்டும் இடைத்தேர்தல்
வேட்பாளர் என்றால்...

2021-2026 வரை
எம்.எல்.ஏ.வாக
இருந்த தனக்கு தனது
கட்சி
சீட்டு தரவில்லை
என்றாலும்
விசுவாசத்தோடு அமைதி
காத்த ஒருவர்

இப்ப எதிர்க்கட்சிக்கு
வேட்பாளர்..

ஆம்...

முன்னவர் த.வெ.க.வின்
மரகதம் குமரவேல்.

பின்னவர் தி.மு.க.வின்
இ.பரந்தாமன்

இப்பச்
சொல்லுங்க...

ஏரி காத்த
ராமர் ஊர்
மதுராந்தகத்துக்கு

பொறுமை காத்த
பரந்தாமன் தானே
பொருத்தமானவர்..

வாக்களிப்பீர்

உதயசூரியன்.

என்னநாஞ் சொல்றது



மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

தி.மு.க. எடுக்கும் மக்கள் நலன் சார்ந்த அனைத்து முடிவுகளுக்கும்

மனிதநேய ஜனநாயக நீதிக்கட்சி ஆதரவாக செயல்படும்!

நிறுவனத்தலைவர் கோவை இல்முதின் அறிக்கை!

சோவை, செப். 30- தமிழ்நாட்டின் முன்னேற்றம் மற்றும் சமூக நீதிப் பாதுகாப்பிற்காக, திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து செயல்பட மனிதநேய ஜனநாயக நீதிக்கட்சி முடிவெடுத்து ஆதரவு வழங்குவதாக அதன் தலைவர் கோவை இல்முதின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

வணக்கம். தமிழக மண்ணில் சமூக நீதியையும், மதச்சார்பற்ற நல்லிணக்கத்தையும், சமத்துவத்தையும் நிலைநிறுத்துவதில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆற்றி வரும் பேரியக்கப் பணிகள் போற்றுதலுக்குரியவை.

மாநிலத்தின் உரிமைகளைப் பாதுகாக்கவும், எளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், சனாதன மற்றும் பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக ஒரு வலுவான முற்போக்குக் கூட்டணி அமைவது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

மக்களுக்கான இந்த உன்னதப் பயணத்தில், கொள்கை ரீதியாக ஒத்த கருத்துடைய இயக்கங்கள் கைகோர்த்துச் செயல்படுவது தமிழகத்தின் எதிர்காலத்திற்கு வலிமை சேர்க்கும் என எங்கள் இயக்கம் திடமாக நம்புகிறது.

அதன்படி, மனிதநேய ஜனநாயக நீதிக்கட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் உன்னதக் கொள்கைகளையும், மக்கள் நலத் திட்டங்களையும் முழுமையாக ஆதரிப்பதோடு, உங்களோடு இணைந்து அரசியல் மற்றும் சமூகத் தளங்களில் கூட்டாகச் செயல்பட ஒரு மனதாக முடிவெடுத்துள்ளது என்பதை இக்கடிதத்தின் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்களது முதன்மையான நோக்கங்கள்:

மதநல்லிணக்கப் பாதுகாப்பு: தமிழகத்தின் அமைதியையும், பன்முகத்தன்மையையும் சிதைக்க நினைக்கும் சக்திகளுக்கு எதிராக ஒன்றிணைந்து நிற்பது.

மக்களுக்கான கூட்டுப் பணி: அடித்தட்டு மக்களின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உரிமைகளுக்காகக் களத்திலும், மக்கள் மன்றத்திலும் இணைந்து குரல் கொடுப்பது.

மாநில சுயாட்சி முழக்கம்: தமிழகத்தின் தன்னாட்சி உரிமைகளை மீட்டெடுக்க உங்களது கரங்களை வலுப்படுத்துவது.

இனிவரும் காலங்களில், திராவிட முன்னேற்றக் கழகம் எடுக்கும் மக்கள் நலன் சார்ந்த அனைத்து முடிவுகளுக்கும், முற்போக்குச் சிந்தனைமிக்க நடவடிக்கைகளுக்கும் மனிதநேய ஜனநாயக நீதிக்கட்சி ஒரு தோழமைச் சக்தியாக என்றும் தோளோடு தோள் நின்று செயல்படும் என உறுதி கூறுகிறோம்.

தமிழகத்தின் விடியலுக்காகவும், சமூக நீதியின் தொடர் வெற்றிக்காகவும் இரு இயக்கங்களின் இந்த இணக்கம் புதிய வரலாற்றுப் பாதையை வகுக்கட்டும்! 'சமூக நீதி வெல்லட்டும்! மனிதநேயம் நிலைக்கட்டும்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



புதுச்சேரி, தட்டாஞ்சாவடி தொகுதி இடைத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் சேது செல்வத்தை ஆதரித்து, விழுப்புரம் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பாகம் 1 முதல் 10 வரையிலான நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். உடன் வானூர் சட்டமன்ற உறுப்பினர் தி.கௌதம் மற்றும் புதுவை மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூராட்சி கழக செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றிய இடைத்தேர்தல் பொறுப்பாளர், இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் ஆர்.காந்தி தலைமையில் காட்டுகரணை ஊராட்சியில் தி.மு.க. வேட்பாளர் பரந்தாமனை ஆதரித்து இராணிப்பேட்டை மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவரும், ஆற்காடு நகர மன்ற துணைத் தலைவருமான டாக்டர்.பவளக்கொடி சரவணன் வாக்குச் சேகரித்தார். உடன் நகர மன்ற தலைவர், ஒன்றிய குழு தலைவர் மற்றும் மாவட்ட மகளிர் மற்றும் மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர்கள் இருந்தனர்.